www.PapaCambridge.com

O

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2009**

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*3469098096*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

This document consists of **4** printed pages and **4** blank pages.

SP (LEO/TL) T76022/2
© UCLES 2009

UNIVERSITY *of* CAMBRIDGE
International Examinations

**[Turn over**

BLANK PAGE

www.PapaCambridge.com

www.PapaCambridge.com

## Section A – Translation

**1** Translate into **English**.

கல்லூரி மாணவி ஆர்வத்துடனும் பயத்துடனும் இருந்தாள். அவள் வெளிநாட்டுக்கு விமானத்தில் முதல் தடவை போகிறாள். அவள் தன் பெட்டி பூட்டி இருக்கிறதா என்றும் கைப்பையில் டிக்கட் பாஸ்போர்ட் எல்லாம் சரியாக இருக்கிறதா என்றும் பார்த்துக் கொண்டாள். இவள் வரிசையில் நிற்கும்போது பெற்றோர் கவலையுடன் கைகளை ஆட்டினர்.

மேற்பார்வையாளர், இவளுடைய டிக்கட் பயணச்சீட்டைப் பார்க்க வேண்டும் என்று கூறினார். பையில் இருந்து எடுக்கும்போது அதை கீழே போட்டாள். பிறகு அதை எடுத்துக் கொடுத்தாள். மேற்பார்வையாளர் சிரித்துக் கொண்டே இதற்கு முன்னால் பிரயாணம் செய்து இருக்கிறாயா என்று கேட்டார். அவள் இல்லை என்று தலையை ஆட்டினாள். அவளுடைய பெட்டியை எடை பார்த்து பெயரை ஒட்டி அனுப்பிவிட்டனர்.

மேற்பார்வையாளர், அவளுடைய பயணச்சீட்டுகளில் முத்திரை போட்டுத் திருப்பிக் கொடுத்தார். அத்துடன் விமானத்தில் ஏறுவதற்குரிய சீட்டையும் கொடுத்து எங்கு போக வேண்டும் என்றும் வழி காட்டினார்.

பயணச்சீட்டுகளைக் கவனமாகக் கையில் வைத்துக் கொண்டு திரும்பவும் பெற்றோரிடம் விடை பெறப் போனார். பெற்றோர் மெதுவாக நல்வாழ்த்துகள் கூறி வழி அனுப்பினர். அவள் ஹாலின் வழியாக விமானத்தில் ஏறுவதற்குப் புறப்பட்டாள்.

[10]

**2** Translate into **Tamil**.

The old lady had finished her shopping in the market and was setting off on her way home. She carried her vegetables and the newspaper in her old cloth bag, and she had her purse tucked under her arm. She stopped at the traffic lights and waited for them to turn red. The speed of some of the cars on the road frightened her, and she always looked both ways several times before stepping out onto the road.

A young lady hurried past her impatiently knocking her shopping bag as she went. Some onions fell out of the bag onto the road. The old lady bent down and tried to gather them up. She managed to hold two of them but her foot knocked another farther away. As she shuffled after this onion, the traffic lights changed to green and a car, driven by a bald-headed man, beeped loudly.

The lady jumped, waving her hands for the car to stop, and dropped her purse. She looked frightened. At that moment two children crossing the road came up to her. One held her hand while the other picked up the missing onion and the purse. They led her to the other side of the road and then put her things back in her bag for her. She thanked them and then continued slowly on her way home.

[20]

www.PapaCambridge.com

## Section B – Reading Comprehension

Please read the following passage carefully and write the answers in **Tamil** using your own wo

நெல்சன் ரோஹிஹ்லாலா மான்டெல்லா என்பவர், உலகத்தில் மிகவும் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவர் ஆவார். தென் ஆப்பிரிக்காவில் இன வேற்றுமை அரசு இதற்கு முன்னால் இருந்தது. இனவேற்றுமை அரசு சரிந்தபடியால், அங்கு தேர்தல் நடைபெற்றது. அதில் தென் ஆப்பிரிக்காவின் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட முதல் ஜனாதிபதி நெல்சன் மான்டெல்லா ஆவார். இனவேற்றுமை அரசில் ஒவ்வொரு இனமக்களும் தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்குப் பள்ளிக்கூடங்களும் தனியாக இருந்தன. இந்த முறை தென் ஆப்பிரிக்காவில் கிட்டத்தட்ட 50 வருடங்களாக இருந்து வந்தது. வெள்ளை நிறம் இல்லாதவர்களுக்கு உரிமைகளும் அதிகம் தரப்படவில்லை. தேர்தல்களில் ‘வோட்டுப்’ போடக்கூட இவர்களுக்கு உரிமை கிடையாது. படிக்கும் வசதிகளும் உடல்நல வசதிகளும் எல்லாருக்கும் அரிதாக இருந்தது.

நெல்சன் மான்டெல்லா 1918 ம் ஆண்டு பிறந்தார். இவர் இனவேற்றுமை செய்தவர்களை எதிர்த்தார். இதை முழுவதும் நிறுத்துவதற்குப் பல போராட்டங்களில் ஈடுபட்டார். இவர் மிகுந்த செல்வாக்குடைய இந்தியத் தலைவர் மகாத்மா காந்தி அடிகளின் வழிமுறைகளான உண்மை, நியாயம், அஹிம்சை ஆகியவற்றால் வசீகரிக்கப்பட்டார். மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவில் சிறிது காலம் வசித்து வந்தார். மான்டெல்லா போராட்டங்களில் அடிக்கடி ஈடுபட்டதால், தலைமறைவாய் வாழ வேண்டிய தேவை இருந்தது. இந்தப் போராட்டங்கள் கடைசியில் இவரை‘ரிவோனியா விசாரணை’யில் கொண்டு போய் விட்டது. சட்டப்பயிற்சியில் தேர்வு பெற்று இருந்தபடியால் ஒரு பிரசித்தமான சொற்பொழிவு ஆற்றினார். அவர் எதற்காக இந்த நடவடிக்கைகளை எடுத்தார் என்றும் விளக்கமாகக் கூறினார். சொற்பொழிவின் முடிவாக கீழே இருப்பதைக் கூறினார்.

> ‘என்னுடைய வாழ்நாளை நான் ஆப்பிரிக்க மக்களின் போராட்டங்களுக்கு அர்ப்பணித்தேன். நான் வெள்ளையர்களுக்கு எதிராகப் போராடினேன். நான் கறுப்பு இனமக்களுக்கு எதிராகப் போராடினேன். இந்த நாடு சுதந்திரம் அடைந்து எல்லா இன மக்களும் ஒன்று சேர்ந்து வாழ வேண்டும் என்றும் எல்லா இன மக்களுக்கும் சமஉரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். இந்தக் குறிக்கோள் வெற்றி அடைவதற்குத் தான் நான் வாழ்கிறேன். தேவை இருந்தால், இந்தக் கொள்கைகளுக்காக நான் உயிரை விடவும் தயார்.’

இந்த விசாரணையின் போது இவர் மேல் குற்றம் சுமத்தி ஆயுட்காலம் முழுவதும் சிறையில் இருக்க வேண்டும் என்று தண்டனை அளிக்கப்பட்டது. மான்டெல்லா சிறையில் இருந்து கொண்டு இனவேற்றுமைக்கு எதிராக போராட்டங்கள் நடக்க ஏற்பாடுகள் செய்தார். இதற்கு ஆப்பிரிக்க மக்களின் உதவிகளும் உலகத்தில் உள்ள மற்ற நாடுகளின் ஆதரவும் கிடைத்தன. தென் ஆப்பிரிக்காவில் பல இடங்களில் குழப்பங்கள் நடந்தன. 1980–ம் ஆண்டு முதல் பள்ளிக்கூடங்களும் தொழிற்சாலைகளும் ஒழுங்காக வேலை செய்யவில்லை. இனவேற்றுமைக்கு முக்கியம் கொடுத்த இந்த அரசாங்கத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த அரசாங்கத்தின் ஜனாதிபதியாக எப் டபிள்யு. டி கிளார்க்கு இருந்தார். கடைசியில் 1990–ம் ஆண்டு நெல்சன் மான்டெல்லாவை இவர்கள் விடுதலை செய்தார்கள். மான்டெல்லாவும் எப் டபிள்யு. டி கிளார்க்கும் (F.W. de Klerk) பேசி இனவேற்றுமையை நிறுத்தினார்கள். இதற்குப் பிறகு நாட்டில் முதல் தேர்தல் 1994 ல் நடைபெற்றது. தென் ஆப்பிரிக்காவில் வோட்டுப் போட எல்லாருக்கும் அனுமதி கொடுக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் மான்டெல்லா முதல் ஜனாதிபதியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். இவர் ஒவ்வொரு இனமக்களுக்கும் இடையில் பாலம் அமைத்து அமைதி வர முயற்சி செய்தார். பள்ளிக்கூடங்கள் கட்டி அனைவரும் படிக்க வசதிகள் செய்தார்; பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கும் வசதிகள் செய்தார். தென் ஆப்பிரிக்காவில் வசிக்கும் பல இன மக்கள் இடையே ஒருமைப்பாடு வருவதற்கும் பாடுபட்டார்.

www.PapaCambridge.com

Now answer the following questions:

1 நெல்சன் மான்டெல்லா எந்த வருடம் பிறந்தார்? இவருடைய முழுப் பெயர் என்ன?

2 இனவேற்றுமை பற்றி இந்தப் பத்தியில் எவ்வாறு கூறப்பட்டு இருக்கிறது என்று உன் சொந்த வாக்கியத்தில் எழுதவும். (4 உதாரணங்கள் கொடுக்கவும்) [4]

3 நெல்சன் மான்டெல்லா எதனால் மகாத்மா காந்தியிடம் வசீகரிக்கப்பட்டார்? [2]

4 நெல்சன் மான்டெல்லா சொற்பொழிவு ஆற்றும் போது தன்னுடைய முக்கியமான குறிக்கோள்கள் என்னவென்று கூறினார்? [3]

5 நெல்சன் மான்டெல்லா ஜெயிலில் இருக்கும் போது என்ன செய்தார்? அதன் விளைவுகள் என்ன? (3 உதாரணங்கள் கொடுக்கவும்) [3]

6 நெல்சன் மான்டெல்லாவிற்கும் எப் டபிள்யு. டி கிளார்க்குக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தை ஏன் முக்கியமாகக் கருதப்படுகிறது? [1]

7 ஜனாதிபதியாக வந்த பிறகு நெல்சன் மான்டெல்லா என்ன செய்தார்? [5]

Language and spelling [5]

Total Marks [25]

**BLANK PAGE**

www.PapaCambridge.com

**BLANK PAGE**

www.PapaCambridge.com

**BLANK PAGE**

www.PapaCambridge.com

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of